பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

03 04 2025 **THURSDAY** **12.40 PM**

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. **BIMSTEC** உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று பாங்காக் சென்றடைந்தார்.

2. பிம்ஸ்டெக் நாடுகள் டிஜிட்டல் கட்டமைப்பு உள்ளிட்ட துறைகளில் கவனம் செலுத்த வேண்டும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

3. அமெரிக்காவின் கூடுதல் வரிவிதிப்பு குறித்து நிதியமைச்சகம் ஆய்வு செய்து வருவதாக மத்திய இணையமைச்சர் திரு பங்கஜ் சௌத்ரி கூறியுள்ளார்.

4. வக்ஃப் சட்டத்திருத்த மசோதா மாநிலங்களவையில் இன்று பிற்பகல் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

5. பெங்களூருவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சாய் கார்த்திக் - விஷ்ணு வர்தன் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<>>>>>>**

**BIMSTEC** உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடி, இன்று தாய்லாந்து சென்றடைந்தார்.

பாங்காக் விமான நிலையத்தில் அவருக்கு ராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்திய வம்சாவளியினரும் பிரதமருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

*(சவுண்ட் பைட் - வரவேற்பு - 14 செகண்ட்ஸ்)*

தமது பயணத்தையொட்டி, பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்த பயணத்தின்போது தாய்லாந்து, இலங்கை மற்றும் பிம்ஸ்டெக் நாடுகள் உடனான ஒத்துழைப்புகளை வலுப்படுத்தும் நோக்கில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க உள்ளதாக தெரிவித்துள்ளார்.

இன்று பிற்பகல் தாய்லாந்து பிரதமர் **Paetongtarn Shinawatra –**வை சந்தித்து, இந்தியா – தாய்லாந்து இடையிலான நட்புறவு குறித்து விரிவாக விவாதிக்க உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாளை பிம்ஸ்டெக் உச்சிமாநாட்டில் பங்கேற்பதுடன், தாய்லாந்து மன்னர் **Maha Vajiralongkorn –** ஐ சந்தித்து பேச உள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

தாய்லாந்து பயணத்தை முடித்துக்கொண்டு இலங்கை செல்ல இருப்பதை சுட்டிக்காட்டியுள்ள பிரதமர், அங்கு இந்தியா - இலங்கை இடையிலான நட்புறவு குறித்து விவாதிப்பதுடன், புதிய துறைகளில் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்து ஆராயப்படும் என்றும் கூறியுள்ளார்.

**<<<<<>>>>>>**

பிம்ஸ்டெக் உறுப்பு நாடுகள் மின் தொகுப்பு இணைப்பு, டிஜிட்டல் கட்டமைப்பு, வர்த்தகம், போக்குவரத்து உள்ளிட்ட துறைகளில் கவனம் செலுத்த வேண்டும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

பாங்காக்கில் பிம்ஸ்டெக் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் பேசிய அவர், தற்போதைய நிச்சயமற்ற சூழலில் உறுப்பு நாடுகள் குறிக்கோளுடன் பிரச்சினைகளை அணுக வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

வருங்காலத்தில் புத்தொழில்கள் மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் பெரும் பங்கு வகிக்கும் என்று குறிப்பிட்ட அவர், சுற்றுலா தொழிலுக்கும் அதிக வாய்ப்புகள் உள்ளதாக கூறினார்.

இணைய பாதுகாப்பு, பயங்கரவாத எதிர்ப்பு, ஆள் கடத்தல், போதைப்பொருள் கடத்தல் போன்றவற்றிற்கு எதிராக உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் திரு ஜெய்சங்கர் வலியுறுத்தினார்.

**<<<<<>>>>>>**

அமெரிக்காவின் கூடுதல் வரிவிதிப்பு குறித்து நிதியமைச்சகம் ஆய்வு செய்து வருவதாக மத்திய இணையமைச்சர் திரு பங்கஜ் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்பின் அறிவிப்பால் ஏற்படும் தாக்கத்தை எந்தவகையில் எதிர்கொள்வது என்பது குறித்து பரிசீலித்து வருவதாக கூறினார்.

இந்தியாவின் நலன் பாதுகாக்கப்படும் என்ற பிரதமர் திரு நரேந்திர மோடியின் உறுதிபாட்டிற்கு ஏற்ப, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு பங்கஜ் சௌத்ரி தெரிவித்தார்.

இதனிடையே, அமெரிக்காவின் வரிவிதிப்பு நடவடிக்கைகளால் இந்தியாவிற்கு பெரிய அளவில் பாதிப்பு ஏற்பட வாய்ப்பில்லை என்று அசோசேம் அமைப்பின் தலைவர் திரு சஞ்சய் நய்யார், கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அமெரிக்காவுக்கான இந்தியாவின் ஏற்றுமதியில் சிறிய அளவிலான பாதிப்புகள்தான் ஏற்படக்கூடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க அதிபரின் அறிவிப்பு குறித்த உலக நாடுகளின் கருத்தை அறிந்த பிறகே இதுகுறித்து அடுத்தக்கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கூடுதல் வரிவிதிப்புகளால் எந்த நாடும் பலனடையப் போவதில்லை என்றும், மாறாக நுகர்வோர்தான் பாதிக்கப்படுவார்கள் என்றும், அதன் காரணமாக பணவீக்கம் அதிகரிக்கும் என்றும் திரு சஞ்சய் நய்யார் கூறியுள்ளார்.

<<<<<>>>>>>

தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி-யின் பிறந்த நாளையொட்டி, அவருக்கு, தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், ஆளுநர் திரு ஆர் என் ரவி, நல்ல உடல் ஆரோக்கியம் மற்றும் மகிழ்ச்சியுடன் வாழ இந்நாளில் வேண்டிக்கொள்வதாக கூறியுள்ளார்.

<<<<<>>>>>>

தூய்மையான எரிசக்தி உற்பத்தியை அதிகரிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார்.

மக்களவையில் இன்று கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், உயிரி எரிபொருள், பசுமை ஹைட்ரஜன் மற்றும் எரிவாயு பயன்பாட்டை ஊக்குவிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

<<<<<>>>>>

வக்ஃப் சட்டத்திருத்த மசோதா மாநிலங்களவையில் இன்று பிற்பகல் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று அவைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இதனை தெரிவித்த அவர், மக்களவையில் நிறைவேற்றப்பட்ட இந்த மசோதாவின் நகல் அவையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அவையின் விதிமுறைகளை தளர்த்தி, இந்த மசோதாவை இன்றே விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு-வின் கோரிக்கையை தாம் ஏற்றுக்கொண்டிருப்பதாகவும் கூறினார்.

<<<<<>>>>>

வக்ஃப் சட்டத்திருத்தத்திற்கு எதிராக திமுக சார்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று இதுகுறித்து அறிக்கை தாக்கல் செய்து பேசிய அவர், இந்த சட்டத்திருத்தம் வக்ஃப் வாரியத்தின் தன்னாட்சி அதிகாரத்திற்கு எதிராக அமைந்திருப்பதோடு, சிறுபான்மையினரின் நலன்களுக்கு எதிரானது என்றும் குறிப்பிட்டார்.

எனவே, இதனை சட்டப்பூர்வமாக தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

முதலமைச்சரின் இந்த அறிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து, பிஜேபி உறுப்பினர்கள் பேரவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பிஜேபி சட்டமன்றக்குழு தலைவர் திரு நயினார் நாகேந்திரன், மக்களவையில் நிறைவேற்றப்பட்ட சட்டத்திருத்தத்திற்கு எதிராக பேரவையில் அறிக்கை தாக்கல் செய்வது சரியல்ல என்றார்.

அனைத்து கட்சிகளுடனும் விரிவாக ஆலோசனை நடத்திய பிறகே வக்ஃப் சட்டத்திருத்தம் நிறைவேற்றப்பட்டிருப்பதாகவும் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

தமிழகத்தின் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மூன்றாவது அலகில் பழுது சரிசெய்யப்பட்டு, இன்று மின் உற்பத்தி தொடங்கியது.

மற்ற இரு அலகுகளை சீரமைக்கும் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - லஷ்மணன் - 48 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>>

மேற்குவங்க மாநிலத்தில் உள்ள பள்ளிக்கூடங்களில் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் நியமனத்தை ரத்து செய்து, கொல்கத்தா உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு செல்லும் என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அம்மாநிலத்தில் கடந்த 2016-ஆம் ஆண்டு மாநில பள்ளிக்கல்வி தேர்வு ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்ட இந்த நியமனங்கள் விதிமுறைகளுக்கு மாறானது என்று கூறி, தொடரப்பட்ட வழக்கை கடந்த ஆண்டு விசாரித்த கொல்கத்தா உயர்நீதிமன்றம், இந்த நியமனங்களை ரத்து செய்து உத்தரவிட்டது.

இதை எதிர்த்து, மேற்குவங்க அரசின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மேல் முறையீட்டு மனுவை விசாரித்த உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சஞ்ஜீவ் கண்ணா தலைமையிலான அமர்வு, இந்த நியமனங்களை மேற்கொண்டதன்மூலம், தேர்வுக்குழு நம்பகத்தன்மையை இழந்துவிட்டதாக தெரிவித்தது.

எனினும், கொல்கத்தா உயர்நீதிமன்ற தீர்ப்பில் சில மாற்றங்களை செய்ய இருப்பதாகவும், சிபிஐ விசாரணைக்கு எதிரான மேற்குவங்க அரசின் செயல்பாடுகள் குறித்து நாளை விசாரிக்கப்படும் என்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்தனர்.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பெங்களூருவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சாய் கார்த்திக் - விஷ்ணு வர்தன் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 6-2, 6-4 என்ற செட் கணக்கில், இந்தியாவின் **'Ishaque Eqbal – Rishi Reddy '** இணையை வென்றது.

--------

புருண்டியில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரியா பாட்டியா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 6-1, 6-4 என்ற செட் கணக்கில், சுவிட்சர்லாந்தின் **Chelsea-**வை வென்றார்.

**<<<<<>>>>>**